**உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டம் (செயற்திட்டக் கூறு) - 2021**

---

உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 17 ஆம் திகதிய 8743 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 6026 எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கை என்பவற்றின் 4.09(ஆ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் மற்றும் நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம், உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் அமைச்சு மற்றும் ருபுஊ ஆல் அங்கீகரிக்கப்பட்ட அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள் என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம், உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் முன்னுரிமைத் துறைகளில் (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவம்) மாணவர் உட்சேர்க்கையை அதிகரித்தல், பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உயர்கல்வித் துறையில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் மற்றும் நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,136 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் இது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 மார்ச் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

எனது அறிக்கையின் 02 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக்கூற்றில் ரூபா 15.65 மில்லியன் மாத்திரமே அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனத்திற்கான கட்டுநிதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், ஆறு அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களின் மூலம் ஏற்பட்ட செலவினத்தை தெளிவாக வெளிப்படுத்தாமல் கட்டுநிதியில் ஏற்பட்ட செலவினத்தை கொள்கை ஆய்வுகள், கற்கைகள், நிதிக்கூற்றுக்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பவற்றில் உள்ளடக்கியுள்ளன. | 15.65 | 2021 ஆம் ஆண்டில் யுர்நுயுனு இற்கான போதுமான பாதீட்டு ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்படாமையே வேறுபாடுகளுக்கான காரணமாகும். | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்பாக அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களுடன் செலவினமானது உறுதிப்படுத்தப்பட வேண்டும். . |
| (ஆ) | சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதற்கு அமைய 2019 தொடக்கம் 2021 வரை ஆறு அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள் மூலம் ஏற்பட்ட மொத்த செலவினம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | 12.45 | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | ஆறு அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களினது மீதிகளின் உறுதிப்படுத்தலின் பிரகாரம் ஆறு அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களிற்கான கட்டுநிதியின் மீதி நிதிக்கூற்றுக்களில் மிகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளது. | 12.5 | -மேற்படி- | -மேற்படி- |

## 2.2 தீர்க்கப்படாத மீதிகள்

| இல | விபரம் | தொகை ரூபா மில்லியன் | தீர்க்கப்படாத காலப்பகுதி | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | முறையானதொரு தேவை ஆய்வுகளின்றி செயற்திட்டத்தினால் முற்பணமானது விடுவிக்கப்பட்டுள்ளது. அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களின் மூலம் கருத்திற்கொள்ளக்கூடிய தொகையானது பயன்படுத்தப்படாமல் உள்ளது. | 22.3 | 1 ½ தொடக்கம் 6 மாதங்கள் | முற்பண பதிவேட்டில் உள்ள மீதிகள் தீர்க்கப்படாத காசு மீதிகளாக தோன்றுகின்றன. ஆனால் உண்மையில் இந்நிதிகள் நிறுவனத்தின் மூலம் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அதுபோன்ற தீர்க்கப்படாத காசு மீதிகள் எதுவும் காணப்படவில்லை. | முற்பணங்களை விடுவிப்பதற்கு முன்பாக முறையான தேவை ஆய்வுகள் அவசியமாகும். |
| (ஆ) | முறையான தேவைகளினை கருத்திற்கொள்ளாமல் எடுப்பனவு செய்யப்பட்டு அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் விளைவற்ற நிலையில் காணப்படும் தொகைகள் ஐடிஏ மற்றும் ஐபிஆர்டி என்பவற்றிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களிற்கான வட்டியினை செலுத்துவதற்கு காரணமாக அமைந்தது. | 265.7 | 2017 தொடக்கம் 2021 | பதிலளிக்கப்படவில்லை | எடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்பாக முறையான தேவை ஆய்வுகள் அவசியமாகும். |

## 2.3 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 507(2) மற்றும் 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02∴2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் 3.1.7 மற்றும் 3.2.7 ஆம் பிரிவு | செயற்திட்டத்தின் தொழிற்பாட்டு தொழில்நுட்ப செயலகங்களின் மீது வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 4.3 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் உபகரணம் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு சில ஓடிஎஸ் கள் (முழுவுளள) கடைப்பிடிக்கப்பவில்லை. | எவ்ஆர் உடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 05.⁚.2016 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | 15 பல்கலைக்கழகங்கள், ளுடுஜயுவுந மற்றும் கல்வி அமைச்சு என்பவற்றுக்காக எஸ்டிஈஎம் இன் கீழ் ரூபா 2,332 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் ரூ உபகரணம் மற்றும் மேலதிக நிதியிடலின் கீழ் ரூபா 430 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆய்வுகூட உபகரணம் மற்றும் தளபாடம் என்பவற்றின் மீதான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இத்தேவைப்பாடுகளினை பூர்த்தி செய்வோம். | சுற்றறிக்கையுடன் இணங்க வேண்டும். |
| (இ) | நிகழ்ச்சித்திட்ட மதிப்பீட்டு ஆவண பின்னிணைப்பு 10 நிகழ்ச்சித்திட்ட செயற்பாட்டு தொழில்நுட்ப ஆதரவளித்தல் கூறு 7, 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01.⁚.2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2.1.2 ஆம் பந்தி | ஓஎம்எஸ்டி இன் செயற்திட்ட அலுவலகத்தில் 07 முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஓஎம்எஸ்டி இன் யுர்நுயுனு தொழிற்பாட்டு செயற்திட்ட அலுவலகம் 20 தொழில்நுட்ப உதவியாளர்களை பணிக்கமர்த்தப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது அங்கீகாரமின்றி ரூபா 13 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. இவைகளுக்கு மேலதிகமாக யுர்நுயுனு பல்கலைக்கழக ஓடிஎஸ் அலுவலகத்தில் 24 ஏனைய தொழில்நுட்ப உதவியாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டு ரூபா 1.2 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | கடன் உடன்படிக்கையின் ஒரு பகுதியான செயற்திட்ட தொழிற்பாட்டு கையேடு டிஏஎஸ் களின் ஆட்சேர்ப்பிற்கான ஏற்பாடுகளை கொண்டுள்ளது. 2019 ஏப்ரல் 29 இல் இடம்பெற்ற வழிகாட்டல் குழு கூட்டத்திலும் ஆட்சேர்ப்பினை அங்கீகரித்தது. | பொருத்தமான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி செயன்முன்னேற்றம்**

| இல. | கூறு/உபகூறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியான | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சி புத்தாக்கம் மற்றும் வர்த்தகமயமாக்கல் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக ஒதுக்கிடப்பட்ட தொகையில் 68 சதவீதத்தை எஸ்எல்ஐஐடி பயன்படுத்தியுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் அடையப்பட்டிருக்கவில்லை. | ஆர்ஐசி ஆனது 2020 நவம்பரில் முடிவடையும் 03 வருட செயற்திட்டமாகும். முடக்கம் மற்றும் ஏனைய தடைகளுக்கு மத்தியிலும் 70 சதவீதத்திற்கு நெருங்கிய செயன்முன்னேற்றம் பாராட்டத்தக்கது. | செயன்முன்னேற்றத்தினை துரிதப்படுத்த வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | அபிவிருத்தி சார்ந்த ஆராய்ச்சி | மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் எஸ்எல்ஐஐடி, சிஐஎன்ஈசி, கேஐயூ மற்றும் சனச அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக ஒதுக்கிடப்பட்ட தொகையிலிருந்து 49.6 சதவீதம் தொடக்கம் 53 சதவீதத்திற்கிடையில் பயன்படுத்தியுள்ளன. | எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் அடையப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 இன் விளைவு மற்றும் அடிக்கடியான முடக்கங்கள் என்பவற்றை கருத்திற்கொள்ளும் போது ஒரு சிலவற்றை தவிர அனைத்து குழுக்கள் மூலமான செயன்முன்னேற்றம் சிறப்பானதாக காணப்பட்டன. | செயன்முன்னேற்றத்தினை துரிதப்படுத்த வேண்டும். |
| (இ) | சமூக இணைப்புக்கலத்தின் அபிவிருத்தி | எஸ்ஏஈஜிஐஎஸ் கேஐயூ மற்றும் சனச அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களின் மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக ஒதுக்கிடப்பட்ட தொகையிலிருந்து 49.5 சதவீதம் தொடக்கம் 56.7 சதவீதத்திற்கு இடையில் பயன்படுத்தியுள்ளன | எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் அடையப்பட்டிருக்கவில்லை. | இங்கே காட்டப்பட்டுள்ள செயன்முன்னேற்றம் 2021 திசெம்பர் இறுதியில் பாராட்டக்கூடியதாக இருந்தமைக்கு ஏற்ப எச்ஈஐ – எஸ்எல் கலத்தின் அபிவிருத்தி 2023 இல் மாத்திரமே பூர்த்தியாக்கப்படும். | செயன்முன்னேற்றத்தினை துரிதப்படுத்த வேண்டும். |

3.2 செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி செயன்முன்னேற்றம்

செயற்திட்டக் கூறு – செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வை உதவிக் குழு

| இல. | கூறு.ˑ.உபகூறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியான | தாமதம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் மற்றும் அடையப்பட்ட செயலாற்றல் | | | |
| (அ) | எஸ்எல்ஐஜடி – ஆர்ஜசி செயற்பர்டு | ரூபா 12.5 மில்லியன் தொகையில், மனிதநேயம் மற்றும் விஞ்ஞான பீடத்தின் மரபணு மாற்றங்கள் ஊடாக மேம்படுத்தப்பட்ட அலங்கார தாவரங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கான குறைந்த செலவு (ஊளுருீ) நுண்ணிய இனப்பெருக்கத்தின் வர்த்தகமயமாக்களுக்காக ரூபா 8.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது. உடன்படிக்கையின் பிரகாரம் அமுல்படுத்துதல் திகதியானது 2019 ஏப்ரல் மாதத்திலும் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்தும் திகதியானது 2019 யூன் மாதத்திலுமாகும். எதிர்பார்க்கப்படும் குறிக்கோளினை அடையப்பெறும் திகதியானது 2022 ஒக்தோபர் ஆகும். | எஸ்எல்ஐஜடி மூலம் வழங்கப்பட்ட தகவலின் படி கொவிட் தொற்றுநோய் காரணமாக சிறியதொரு தாமதம் காணப்படுகின்றது. | விலை அதிகரிப்பு மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளினால் தேவையான உபகரணம் மற்றும் வேதியல் என்பவற்றை பெறுவதானது பாதிக்கப்பட்ட போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக செயன்முன்னேற்றம் நன்றாக இருந்தது. | செயன்முன்னேற்றத்தைத துரிதப்படுத்துவதோடு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் விளைவுகளையும் அடைந்து கொள்ள வேண்டும். |
| (ஆ) | எஸ்எல்ஐஜடி டிஓஆர் செயற்பர்டு | ரூபா 10 மில்லியன் தொகையில், இலங்கையில் இளைஞர் மக்கள் தொகையிடையில் நிகழ்நிலை துன்புறுத்தலின் புலனாய்விற்காக ரூபா 3.1 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டது : மனிதநேயம் மற்றும் விஞ்ஞான பீடத்தின் | எஸ்எல்ஐஜடி மூலம் வழங்கப்பட்ட தகவலின் படி கொவிட் தொற்றுநோய் காரணமாக சிறியதொரு தாமதம் காணப்படுகின்றது. | கொவிட் 19 மற்றும் முடக்கம் காரணமாக தரவு சேகரிப்பானது தாமதமாக்கப்பட்டது. | செயன்முன்னேற்றத்ததை துரிதப்படுத்துவதோடு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் விளைவுகளையும் அடைந்து கொள்ள வேண்டும் மற்றும் செயற்திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பர்டுகள் மீது நெருங்கிய மேற்பார்வையும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | நிகழ்நிலை துன்புறுத்தலை எதிர்த்து போராடுவதற்கான தேசிய உக்தியினை அபிவிருத்தி செய்தல். | | | அவசியமாகும். |
| (இ) | எஸ்ஏஈஜிஜஎஸ் (ளுயுநுபுஜஐளு) | ரூபா 8 மில்லியன் தெகையில், இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்திக்கான முக்கியத்துவத்தின் மதிபீட்டிற்காக ரூபா 7.6 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது : முகாமைத்து பீடத்தின் இலங்கை பாடசாலைகளில் ஆங்கில மொழி தரங்களினை மேம்படுத்துவதில் சமூகப் பொருளாதாரத்தின் தாக்கம் | எஸ்ஏஈஜிஜஎஸ் மூலம் வழங்கப்பட்ட தகவலின் படி கொவிட் தொற்றுநோய் காரணமாக தாமதம் ஏற்படுகின்றது. | செயலாற்றல் குறிகாட்டிகளை இக்குழு அடைந்துள்ளதால் செயற்திட்டம் விரைவாக மூடப்படும். | செயன்முன்னேற்றத்தை த துரிதப்படுத்துவதோடு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் விளைவுகளையும் அடைந்து கொள்ள வேண்டும் மற்றும் செயற்திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பர்டுகள் மீது நெருங்கிய மேற்பார்வையும் அவசியமாகும். |

**3.3 பொருளாதாரமற்ற பரிமாற்றம்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதியறிக்கையின் படி, ஓஎம்எஸ்டி இன் கட்டிட வளாகத்தில் 2021 ஆம் ஆண்டின் போது மொத்தமாக ரூபா 22.6 மில்லியன் ஏற்பட்டுள்ளது. எனினும், 35 ஓஎம்எஸ்டி பணியாளர்கள் மாத்திரமே பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், வாகன வாடகைக்காக ரூபா 4.5 மில்லியனும் போக்குவரத்திற்காக ரூபா 1.3 மில்லியனும் செலவளிக்கப்பட்டுள்ளது. | அலுவலக வளாகங்கள் மற்றும் ஏனைய சேவைகளானது போட்டிக் கொள்முதல் செயன்முறை ஊடாக தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் மிகவும் சிக்கனமான வீதத்தில் இவைகள் கருதப்பட்டன. | பொருளாதார ரீதியாக செலவினங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்பான விடயங்கள்**

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட பணியாளர்களின் ஓஎம்எஸ்டி இல் வெவ்வேறு பதவிகளில் 21 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 15 பணியாளர்கள் மிகையாக இருந்தனர். மற்றும் வெற்றிடமாக இருந்த நான்கு பதவிகள் செயற்திட்ட செயலாற்றலினை நேரடியாக பாதித்தது. | அங்கீகரிக்கப்பட்ட பணிநிலை பதவிகளின் இடத்தில் டிஏ க்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். ஓஎம்எஸ்டி இல் மிகையான பணியாளர்கள் காணப்படவில்லை. மிகுதி செயற்திட்ட காலப்பகுதி ஒரு வருடமாகும். தற்போதிருக்கும் பணியாளர்களைக்கொண்டு | எந்தவொரு ஆட்சேர்ப்பிற்கும் முன்பாக பணிநிலையை திருத்துவதற்கு அரச அதிகாரிகளிடமிருந்து தேவையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகளின் சுமூகமான செயற்பாட்டினை |

| | | |
|---|---|---|
| | யுர்நுயுனு இனால் நிர்வகிக்க முடியும். | நிச்சயித்துக்கொள்வதற்கு முக்கிய பணியாளர்களினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடு

| கணக்காய்வுஅ விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| வெளிவளங்கள் திணைக்களத்தின் பதில்கடமை பணிப்பாளர் நாயகத்தினால் 2021 ஒக்தோபர் 28 இல் 10,027 மாணவர்களினை மேலதிகமாக உள்வாங்கும் வசதிக்கான நிதி உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய தேவைகளிற்காக செயற்திட்ட முன்மொழிவானது உலக வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது. நிதியமைச்சின் செயலாளரின் ஆலோசனையுடன் தேசிய திட்டமிடல் திணைக்களமானது தற்போதுள்ள நிர்மாணப் பணிகள் மற்றும் தொடர்ச்சியான புனர்வாழ்வு நடவடிக்கைகள், அவசர தேவைப்பாடுடைய உபகரணங்களின் கொள்வனவு மற்றும் கையிலுள்ள பட்டியல்களின் தீர்ப்பனவை முன்னுரிமை அடிப்படையில் தீர்த்தல் என்பவற்றினை பூர்த்தி செய்வதற்காக முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் மேலதிக நிதியிடலின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும். எனினும், யுர்நுயுனு செயற்பாட்டிற்காக வழங்கப்பட்ட ரூபா 2,200 மில்லியன் பெறுமதியான மேலதிக நிதியிடலில் புதிய உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு அல்லது தற்போதுள்ள உடன்படிக்கைகளினை திருத்துவதற்கு 2022 மே 09 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதுள்ள ஒப்பந்தத்தினை திருத்தம் செய்தற்கான பணிகள் நடைபெற்று வருகின்றதுடன் ஜஎம்எவ் இன் கடன் மறுசீரமைப்பு செயன்முறை காரணமாக தாமதம் ஏற்படுகின்றது. | புதிய உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு அல்லது மூல உடன்படிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |